மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டும் என்றால், குறைந்தபட்சம் 3 ஆயிரம் பசு இனங்கள் அல்லது ஆடு, மாடுகள் இருக்க வேண்டும். மருந்தகம் அமைக்க வேண்டும் என்றால், 5 ஆயிரம் எண்ணிக்கையில் இருக்க வேண்டும், மருத்துவமனை அமைக்க வேண்டும் என்றால், 10 ஆயிரம் எண்ணிக்கையிலே இருக்க வேண்டும். அந்த எண்ணிக்கைக்குக் குறைவான இடங்களிலே, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து கொண்டு, பார்வைக் கிளை நிலையங்கள் என்ற அமைப்பை ஏற்படுத்தலாம் என்று எண்ணியிருக்கிறோம். அதுசம்பந்தமாக எனது மானியக் கோரிக்கை பதிலுரையிலே அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 75, மாண்புமிகு திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

75—

காவிரி நீர்

***39025—திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குனேரி தொகுதி, திருக்குறுங்குடியில் சுற்றுலாப் பயணிகளுக்கு விடுதிக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குனேரி தொகுதி, திருக்குறுங்குடியில், சுற்றுலாப் பயணிகளுக்கு விடுதி கட்ட வணிக ரீதியான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

2009 ஜூலை 2]

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறுங்குடியில் திருமலைநம்பிக் கோயிலை நம்பி பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கே வருகை தருகின்றார்கள். சுற்றுலாவை ஊக்கப்படுத்த வேண்டும் என்று நினைக்கின்ற நமது தமிழக அரசு, அங்கே இடமிருக்கிறது; பழைய கட்டடம் இருக்கிறது; அதை இடித்துப் புதிய பயணிகள் விடுதியைக் கட்டி, அந்த மக்கள் அங்கே தங்கிச் செல்வதற்கு வசதியான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும். அதேபோல, கூந்தங்குளத்திலே ஏற்கெனவே பயணிகள் விடுதி ஒன்று கட்டப்பட்டு, அதற்கு அலுவலர்கள் நியமிக்கப்படாமல் கடந்த மூன்று ஆண்டுகளாக அது மூடியே கிடக்கிறது. எனவே, நமது அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்தில் கொண்டு நிறைவேற்றுவார்களா என்று நமது பேரவைத் தலைவர்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலுக்கு தினசரி 30-லிருந்து 50 பேர் வருகை தருகிறார்கள். உடனடியாகத் திரும்பியும் விடுகிறார்கள். விடுதி என்பது தேவையில்லாத ஒன்றாக இந்தத் துறை கருதுகிறது. அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலிருந்து கன்னியாகுமரியில் 45 கிலோ மீட்டர் தூரத்திலும், அதேபோன்று குற்றாலத்தில் சுமார் 80 கிலோ மீட்டர் தூரத்திலும், திருச்செந்தூர், திருநெல்வேலி போன்ற சுற்று வட்டாரப் பகுதிகளில் 50 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகவும், அதிகமான விடுதிகள் இருக்கின்றன. அவையே போதுமானதாகத் துறை கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார்.

முற்பகல் 10-10

திரு. எச். வசந்தகுமார்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டடம் இருக்கிறது. அதைப் பயன்படுத்த வேண்டும். பயன்படுத்தினால்தான், தமிழக அரசுக்கு நல்ல பெயர் கிடைக்கும் என்பதால், நீங்கள் கண்டிப்பாக கூந்தங்குளத்தில் திறக்காமல் இருக்கின்ற அந்த அறைக்கு ஒரு ஊழியரை நியமித்து அதைத் திறந்து, அதையும் பயன்படுத்தலாம். திருக்குறுங்குடி என்பது, திருமலைநம்பி

[2009 ஜுலை 2

உள்ள கோயில் என்று தமிழகத்திலிருந்து எல்லா மக்களும் வருகிறார்கள். கன்னியாகுமரிக்கும், திருநெல்வேலிக்கும் இடையிலே இருந்தாலும் அதை நீங்கள் ஒரு centre-ஆக வைத்தால், அங்கேயும் மக்கள் தங்கி மற்ற ஊர்களுக்குச் செல்வதற்கு வசதியாக இருக்கும். எனவே, அமைச்சர் அவர்கள் அதைக் கண்டிப்பாகச் செய்து தரவேண்டும் என்று பேரவைத் தலைவர்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் எங்களுடைய துறையின் சார்பாக விடுதியும் ஏற்கெனவே இருந்ததாகச் சொல்கிறார்கள். நிச்சயமாக இல்லை. இருந்தாலும்கூட, விடுதியைப் பொறுத்தமட்டில் தனியாரை ஊக்கப்படுத்த வேண்டும் என்றுதான் இப்போது இந்தத் துறையின் சார்பாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சுமார் 55 விடுதிகளைத் தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக இயக்கிக்கொண்டிருக்கிறோம். அவையே போதுமானதாக இந்தத் துறை கருதுகிறது. இருந்தாலும், அந்தப் பகுதிகளில் தனியார் யாராவது முன்வந்தால் அவர்களுக்கு இந்தத் துறையின் சார்பாக வேண்டிய வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் சுற்றுலாப் பகுதியில் அமைந்துள்ள வனப் பகுதியில் தங்கும் விடுதிகள், வனத் துறையின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விடாமல், வனத் துறையே அவற்றை வைத்திருக்கிறார்கள். அவற்றைச் சுற்றுலாத் துறையைச் சேர்ந்த ஊழியர்கள், இன்னும் தொகை கட்டவில்லை என்று கூறி வைத்திருக்கிறார்கள். மேலும், வருகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குக் கூடுதல் அறைகள் கட்டுவதற்குப் போதுமான இடம் உள்ள காரணத்தால், இந்த பிச்சாவரம் சுற்றுலா மையத்தில் கூடுதல் அறைகள் கட்ட வேண்டும். விசைப் படகுகளும் வாங்கினால் இன்னும் சிறப்பாக இருக்கும். சுற்றிப் பார்ப்பதற்குத் துடுப்புப் படகையே பயன்படுத்துவதால், அங்கே சரியில்லாமல் இருக்கிறது. ஆகவே, விசைப் படகு வாங்கினால் நன்றாக இருக்கும். அதனால்*

2009 ஜூலை 2]

அமைச்சர் அவர்கள், பிச்சாவரம் சுற்றுலாப் பகுதியில் தங்கும் அறைகள் கட்டுவதற்கும், விசைப் படகுகளை வாங்குவதற்கும் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் பகுதியில் இந்தத் துறையின் சார்பாக ஏற்கெனவே படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும்கூட தேவையைக் கருத்தில்கொண்டு அதிகப்படுத்த வேண்டிய தேவை இருந்தால் நிச்சயமாக அதிகப்படுத்தித் தருவதற்கு இந்தத் துறை தயாராக இருக்கிறது. அதே நேரத்தில் அங்குள்ள விடுதியைப் பொறுத்தமட்டில், தொடர்ந்து இந்தத் துறையே பராமரித்து வந்தது. இப்போது அதை வனத் துறைக்குச் சொந்தமான இடம் என்ற காரணத்தாலும், மைய அரசின் வன அமைச்சகத்தின் அனுமதி கிடைக்காததாலும்,. அது அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. அங்கு இத்துறை விடுதியை நடத்த இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

நியாய விலைக் கடை பொருட்கள்

***27223—திரு. செ.ம. வேலுசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பொது விநியோகத் திட்டத்தின்மூலம் ஏழை

TRUTH ALONE TRIUMPHS